# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>

## <u>O.S.No. 65/2020</u>

## <u>P.W. 3 நாள் – 07.02.2024</u>

2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7ம் நாள் சீனிவாசன் என்பவரின் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1973ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின்படி செல்வி.எஸ்.சங்கீதா, உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனிவாசன் | தொழில் | : | வட்டாட்சியர், சேந்தமங்கலம் |
| த/பெயர் | : | | ஜாதி | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |
| மாவட்டம் | | | | | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது சேந்தமங்கலம் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று சாட்சியமளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்படைக்க எடுத்து வந்துள்ளேன். சர்வே எண். 290/2, 290/11 க்கான வருவாய்துறை ஆவணங்கள் ஒப்படைக்க எடுத்து வந்துள்ளேன். ச.எண்.290/2 க்கான பட்டா, சிட்டா சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.1** ஆகும். மேற்படி சர்வே எண்.290/2 க்கா பட்டா வீராசாமிகவுண்டர் மகன் குப்புசாமி பெயரிலிருந்து ராமசாமி கவுண்டர் பெயரிலும் ராமசாமி கவுண்டர் மகன் பொன்னுசாமிகவுண்டர் பெயரிலும் மேலும் சின்னுசாமி மகன் ராமசாமி பெயரிலும் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது. ச.எண்.290/2 க்கான 'அ' பதிவேடு சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.2** ஆகும். மேற்படி அ பதிவேடு V.குப்புசாமி பெயரில் உள்ளது. ச.எண்.290/2 என்பது வில்லைவீடு என்று காண்பிக்கப்பட்டுள்ளது. ச.எண்.290/11 க்கான பட்டா, சிட்டா சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.3** ஆகும். ச.எண்.290/11 யார் பெயரில் உள்ளது என்றால், துரைசாமி மகன் செல்வம், செல்வம் மனைவி ராணி பெயரில் உள்ளது.

ச.எண்.290/11 க்கான 'அ' பதிவேடு சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.4** ஆகும். மேற்படி 'அ' பதிவேடு துரைசாமி மகன் செல்வம், செல்வம் மனைவி ராணி பெயரில் உள்ளது. ராணி பெயரில் உள்ளது. ச.எண்.290 க்கான புலவரைபடம் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.5** ஆகும்.

Sd/–P.K.Dhamayanthi,
District Munsif, Sendamanglam.